28.03.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.216 /2020 ) திரு.சுடலைமணி.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) எனது அப்பா பெயர் சுடலை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தந்தை சுடலைக்கு 4904/2011 கிரைய ஆவணத்தின் மூலம் சுயராஜ்ஜியமாக பாத்தியப்பட்டியிருந்தது என்றால் சரிதான். எனது அப்பா தற்போது உயிருடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை எதுவும் கிடையாது என்றால் எனக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை. எனது அப்பா பிரதிவாதி முருகனுக்கு தாவாச்சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் நேரிடையாக தெரியுமா என்றால் நேரிடையாக தெரியாது விசாரித்ததில் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 வது வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.4 வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் எனது அப்பா பிரதிவாதி முருகனுக்கு ரூ.5,00,000/-த்தை எப்போது செலுத்தினார் என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனது பதில் அறிவிப்பில் எந்த தேதியில் எனது தந்தை வாதிக்கு ரூ.5,00,000/-ம் செலுத்தினார் என்று தேதி சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதி முருகனும்எனது தந்தையும் உறவினர் கிடையாது என்றால சரிதான் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் முருகன் என்பவர் எனது தந்தைக்கு நல்ல பழக்கமுடையவர் என்றோ அல்லது நண்பர் என்றோ சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்க மாட்டோம். நிருபண வாக்குமூலம், எதிர்வழக்குரையில் பணம் கேட்டு வாதி முருகனை எனது தகப்பனார் எப்போது அனுகினார் எப்போது பணம் தேவைப்படுவதாக கேட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் எனது தந்தை கேட்கவில்லை வாதியாகத்தான் எனது தந்தையிடம் கேட்டார். வா.சா.ஆ.4 பதில் அறிவிப்புக்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் விவரங்கள் சொன்னேன் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் எனது அப்பா ரூ.5,00,000/-கடன் வாங்கிதாகவும் அதற்கு ரூ.20,00,000/-வரை கந்துவட்டியாக கொடுத்திருப்பதாகவும் அதனால் ரூ.25,00,000/-ம் உள்ள மதிப்பினை அடமானம் என்று கூறி ஏமாற்றி கிரையப்பத்திரம் பதிந்துகொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலம்

பாரா 3ல் 20.01.2014 அன்று ரூ.5,00,000/- ரொக்கம் கடனகாக பெற்றார் அதுவகைக்கு செக்கியூரிட்டிக்காக தபசில் வீட்டை தன் பெயருக்கு அடமானம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று வாதி வற்புறுத்தியதன் பேரில் வாதி அடமானம் என்று கூறி ஏற்படுத்தியிருந்த ஆவணங்களில் வாதியை நம்பி 22.01.2014 அன்று கயத்தார் சார்பதிவாளர் அலுவலகம் சென்று என்னுடைய தகப்பனார் கைரேகையிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் பாரா 4ல் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் துவங்கி 2018 ஆம்ஆண்டு மே மாதம் வரை வட்டியாக மட்டும் வாதி வசம் ரூ.15,00,000/- எனதுஅப்பாசெலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா வாதிக்கு வட்டி செலுத்தினார் என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் கையில் தான் நேரிடையாக பணம் கொடுத்துள்ளார். எனது நிருபண வாக்குமூலத்தில் எத்தனை சதவீதம் வட்டி மாத வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஆவணத்தை ரத்து செய்ய இதுவரை எனது அப்பா சட்ட நடிவக்கையாக வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அரசியல் செல்வாக்கால் அது தடுக்கப்பட்டுவிட்டது. நான் சொல்லுவது போல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அரசியல் செல்வாக்கால் அது தடுக்கப்பட்டுவிட்டது என்ற விவரத்தை எனது பதில் அறிவிப்பிலோ வழக்கிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் புகார் கொடுத்த விவரத்தை நிருபண வாக்குமூலத்தில் மட்டும் சொல்லியுள்ளேன். எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி எந்த அரசியல் கட்சியில் பிரமுகராக இருந்து வருவதை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லுவது போல் வாதி அரசியல் செல்வாக்குடையவர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2014ல் ரூ.25,00,000/-ம்பெறும் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2020 ஆம்ஆண்டு ஜுலை மாதம் முதல் வாதிக்கு எவ்வித வாடகையும் செலுத்தவில்லை என்றால் நான் வாடகைக்கு இருக்கவில்லை. நாங்கள் தாவா வீட்டில் வாய்மொழி வாடகைதாராக குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை. தாவா வீட்டில் வாடகை செலுத்தாமல் குடியிருந்து வரவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு பொய்யாக அடமான ஆவணம் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. அடமானத்தை

செல்அடிப்பதற்கு நானோ எனது தந்தையோ வழக்கு ஏதும் தொடர்ந்துள்ளோமா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
28.03.2025.